தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

Vol: 02 | Issue: 246 | 4 Pages | 3.4.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 246 | 4 பக்கங்கள் | 3.4.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு**

**விளக்கம்:**
எப்பொருள்எத்தன்மையதாய்த்தோன்றினாலும் (அத்தோற்றத்தை மட்டும் கண்டுமங்காமல்) அப் பொருளின் உண்மையான இயல்பை அறிவதே மெய்யுணர்வு.

# கச்சத்தீவை மீட்க கோரி முதல்அமைச்சர் கொண்டு வந்த தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றம்

சென்னை ஏப்3

தமிழ்நாடு சட்டப் பேரவையில், கச்சத்தீவு மீட்பு தொடர்பான அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் தொடர் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றனர். இலங்கையில் அரசியல் நிலைமைகள் மாறினாலும், தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது மட்டும் இன்னும்மாறாமல் இருக்கிறது. தமிழக மீனவர்கள், இந்திய மீனவர்கள்தான் என்பதை மத்திய அரசு அடிக்கடி மறந்துவிடுகிறது.

எல்லைதாண்டி வந்தார்கள் என்று சொல்லி அவர்களுக்கு அதிகபட்ச சிறை தண்டனை விதிக்கப்படுகிறது அல்லது அதிகபட்ச அபராதம் விதிக்கப்படுகிறது.

அண்டை நாடாக இருந்து கொண்டு இந்திய மீனவர்கள் மீது எந்தவிதமான இரக்கமும் இல்லாமல், நம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை நசுக்கும்விதமாக, ஏன் அடியோடு பறிக்கும்விதமாக இலங்கைக் கடற்படையினரும், இலங்கை அரசும் நடந்து கொள்வது நமக்கெல்லாம் மிகுந்த கவலையளிக்கிறது. இதனை மத்திய பா.ஜ.க. அரசு தடுத்து நிறுத்திட வேண்டும்.

தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து தமிழ்நாடு அரசின் சார்பில் நான் தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டு வருகிறேன். இதுவரைக்கும் மீனவர்கள் கைது, தாக்குதல் குறித்து 74 கடிதங்களை மத்தியவெளியுறவுத்துறைஅமைச்சருக்கும், பிரதமருக்கும் எழுதியிருக்கிறேன். பிரதமரை நேரில் சந்திக்கும்போதெல்லாம்இதுகுறித்து வலியுறுத்தியிருக்கிறேன். இரு நாட்டு மீனவர்களுக்கு இடையேயான பேச்சு வார்த்தையில் ஆக்கபூர்வமான முடிவுகள் எட்டப்பட இயலாமல் கடந்து கொண்டிருக்கிறது.



கடிதம் எழுதினால் விடுவிப்பது, பிறகு கைது செய்வதென்று இலங்கை அரசின் நடவடிக்கை தொடர்ந்து கொண்டே இருப்பதால், தமிழ்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுகிறது.

எவ்வளவு காலத்துக்கு இதனைச் சகித்துக் கொண்டு இருக்க முடியும்? இதுபோன்ற சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண கச்சத்தீவு மீட்பே மிகச் சரியான வழி என்பதை மீண்டும் வலியுறுத்திட விரும்புகிறேன்.

கச்சத்தீவு விவகாரத்தைப் பொறுத்தவரைக்கும், கச்சத்தீவை மாநில அரசுதான் இலங்கைக்கு அளித்தது போன்று ஒரு தவறான தகவலைப் பரப்பி அரசியல் செய்வது அரசியல் கட்சிகளுக்கு வழக்கமாகி விட்டது. ஆனால், அரசியல் ஆதாயத்திற்காக கட்சிகள் செய்யும் அதே தவறை மத்திய அரசு செய்வது வருந்தத்தக்கது; ஏற்கமுடியாதது. கச்சத்தீவைப் பொறுத்தவரைக்கும், அந்தத் தீவைக் கொடுத்து, ஒப்பந்தம் போட்ட போதே முதல்அமைச்சராக இருந்த கருணாநிதி கடுமையாக எதிர்த்தார். தி.மு.க. எம்.பி.க்களும் நாடாளுமன்றத்தில் கடுமையாக எதிர்த்தனர்.

ஏற்கனவே முன்னாள் முதல்அமைச்சர்கள் ஜெயலலிதா, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் கச்சத்தீவைத் திரும்பப் பெற தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்திருக்கக்கூடிய பா.ஜ.க. அரசு இன்றுவரை கச்சத்தீவை மீட்பது குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

ஆகவே, இந்தச் சூழலில், தமிழ்நாட்டு மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும் போது இலங்கைக் கடற்படையினரால்கடும்தாக்குதலுக்கு உள்ளாவது, படகுகள் பறிமுதல் செய்யப்படுவது, கடும் அபராதம் விதிக்கப்படுவது போன்றவற்றிலிருந்து தமிழ்நாட்டு மீனவர்களைப் பாதுகாக்கவும், விரைவில் இலங்கை செல்லும் பிரதமர் தமிழ்நாட்டு மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும், கச்சத்தீவை மீட்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைக்கு பேச்சுவார்த்தை நடத்திட வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றம் விரும்புகிறது. இதனை அடிப்படையாகக் கொண்ட தீர்மானத்தை இப்போது நான் முன்மொழிகிறேன்:

தீர்மானம்:

"தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டிடவும், இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஏற்படும் அனைத்து இன்னல்களைப் போக்கிடவும், கச்சத்தீவை மீண்டும் பெறுவதே நிரந்தரத் தீர்வாக அமையும்.

இதனைக் கருத்தில் கொண்டு, இந்தியஇலங்கை ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து, கச்சத்தீவைத் திரும்பப்பெறுவதற்கானஅனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும், அரசு முறைப் பயணமாக இலங்கை செல்லும் பிரதமர் அந்நாட்டு அரசுடன் பேசி, இலங்கை சிறையில் வாடும் நம் நாட்டு மீனவர்களையும், அவர்களது படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்து மீட்டுக் கொண்டு வரவேண்டுமென்று இப்பேரவை வலியுறுத்துகிறது." என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாட்டைச் சார்ந்த இந்திய மீனவர்களின்நலன்கருதி, அனைத்துக் கட்சிகளும் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து இந்த தீர்மானத்தின்மீது உறுப்பினர்களின் விவாதம் நடைபெற்றது. இந்த தீர்மானத்துக்கு அ.தி.மு.க., பா.ஜ.க. உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் ஆதரவு அளித்தன. இதையடுத்து குரல் வாக்கெடுப்பு மூலமாக முதல்அமைச்சர் கொண்டு வந்த அரசினர் தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அப்பாவு அறிவித்தார்.

## 13 ஆயிரம் சதுர கி.மீ. வனப்பகுதிகள் ஆக்கிரமிப்பில் சிக்கியுள்ளனமத்திய அரசு தகவல்



புதுடெல்லி, ஏப். 3

வனப்பகுதிகள் ஆக்கிரமிப்பு தொடர்பான வழக்கு ஒன்றில் தேசிய பசுமை தீர்ப்பாயம், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள வனப்பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்பு விவரங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்று மத்திய வனத்துறைக்கு உத்தரவிட்டது.

அதன்படி கடந்த 2024ம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி 25 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மொத்தம் 13 ஆயிரத்து 56 சதுர கிலோ மீட்டர் வனப்பகுதி ஆக்கிரமிப்பின் கீழ் இருப்பதாக வனத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. அந்தமான்நிக்கோபார் தீவுகள், அசாம், அருணாச்சல பிரதேசம், ஆந்திர பிரதேசம், சண்டிகர், சத்தீஷ்கார்,தாத்ராநகர்ஹவேலி,டாமன்டையூ,கேரளா,லட்சத்தீவுகள், மராட்டியம், ஒடிசா, புதுச்சேரி, பஞ்சாப், தமிழ்நாடு, திரிபுரா, உத்தரகாண்ட், உத்தர பிரதேசம், ஜார்கண்ட், சிக்கிம், மத்தியபிரதேசம், மிசோரம் மற்றும் மணிப்பூர் ஆகிய 25 மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் அறிக்கை தாக்கல் செய்துள்ளன.

அதே நேரம் பீகார், அரியானா, இமாசல பிரதேசம், ராஜஸ்தான், தெலுங்கானா, மேற்குவங்காளம், நாகாலாந்து, டெல்லி, ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகியவை இன்னும் அறிக்கை தாக்கல் செய்யவில்லை.

இந்த அறிக்கையின்படி தமிழ்நாட்டில் தமிழ்நாட்டில் 157.68 சதுர கி.மீ. வனப்பகுதியும், கேரளாவில் 49.75 சதுர கி.மீ. வனப்பகுதியும் ஆக்கிரமிப்பில்உள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது. மத்தியவனத்துறை அமைச்சகத்தின் அறிக்கையின்படி, இதுவரை 409.77 சதுர கி.மீ. வனப்பகுதியில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

## முகேஷ் அம்பானியின் மகன் ஆனந்த் அம்பானி துவாரகா கோவிலுக்கு பாதயாத்திரை



புதுடெல்லி, ஏப்.3

உலக பெரும் பணக்காரர்களில் ஒருவராகவும் ஆசியாவின் நம்பர் 1 பணக்காராருமாக இருப்பவர்முகேஷ்அம்பானி. ரிலையன்ஸ் இண்ட்ஸ்ட்ரீஸ் தலைவரான முகேஷ் அம்பானியின் ஆகாஷ் அம்பானி, ஆனந்த் அம்பானி என இரண்டு மகன்கள் உள்ளனர். இவருடைய இளைய மகன் ஆனந்த் அம்பானிக்கு கடந்த ஆண்டு பல நூறு கோடி செலவில் பிரமாண்டமாக திருமணம் நடைபெற்றது.

ஆனந்த அம்பானி வரும் 10 ஆம் தேதி 30வது பிறந்த நாளை கொண்டாடுகிறார். பிறந்த நாளை முன்னிட்டு ஜாம் நகரிலிருந்து 140 கி.மீ. தூரம் பாதயாத்திரையாக சென்று துவாரகா கோவிலில் தரிசனம் செய்ய உள்ளார். இதற்காக, அவர் ஒவ்வொரு இரவும் 1012 கி.மீ. தூரம் நடந்து செல்ல உள்ளார். பலத்த பாதுகாப்புக்கு இடையே அவர் இந்த பாதயாத்திரயை தனது பணியாளர்களுடன் மேற்கொண்டுள்ளார்.

## காற்று மாசுவுக்கு போக்குவரத்து துறை முக்கிய காரணம்நிதின் கட்காரி



மும்பை, ஏப்.3

மும்பையை அடுத்த தானேயில் சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சார சைக்கிளை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியில் மத்திய சாலை போக்குவரத்து துறை மந்திரி நிதின் கட்காரி பேசியதாவது:

அதிகரித்து வரும் நகரமயமாக்கலை கருத்தில் கொண்டு, சைக்கிள் ஓட்டுதலை நிலையான நகர்ப்புற போக்குவரத்து விருப்பமாக ஊக்குவிக்க வேண்டும். சாலை பாதுகாப்பை மேம்படுத்துவதோடு, நகரங்களில் நெரிசலை குறைக்கவும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பயணத்தை ஊக்குவிக்கவும் தனியாக சைக்கிள் ஓடுபாதைக்கான உள்கட்டமைப்பு தேவையாகும்.

காற்று மாசுபாடு இந்தியாவின் மிகப்பெரிய சவாலாகும். இதில் போக்குவரத்து துறை முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே பெட்ரோலிய எரிபொருட்களில் இருந்து, மின்சார எரிசக்திக்கு மாறுவதற்கான அவசர தேவை உள்ளது. எரிபொருள் இறக்குமதிக்காக ஆண்டுதோறும் ரூ.22 லட்சம் கோடி செலவிடப்படுவதுடன், இது சுற்றுச்சூழலுக்கு ஆபத்தாகவும் மாறி உள்ளது.

தேசங்களின் முன்னேற்றத்திற்கு சுத்தமான எரிசக்தியை ஏற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானது. மின்சார மற்றும் மாற்று எரிபொருட்களுக்கு மாறுவது சுற்றுச்சூழல் தேவை மட்டுமல்ல, பொருளாதார கட்டாயமும் கூட. நாம் கவனம் செலுத்த வேண்டிய மற்றொரு முக்கிய பகுதி உயிரி எரிபொருள்கள். விவசாய கழிவுகளை உயிரி எரிபொருளாக மாற்றுவதில் அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் விவசாயிகள் எரிசக்தி வழங்குபவர்களாக மாறுவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## சிங்கம்புணரி சிலநீர்பட்டி பாலாறு தூர்வாரும் பணிகளை தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சமுக ஆர்வலர்கள்...



சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி வட்டத்திற்குட்பட்ட சிலநீர்பட்டி பகுதியிலுள்ள பாலாற்றில் தூர்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜீத் கொடியசைத்து தொடங்கி வைத்தார்..

சிவகங்கை மாவட்டத்தில் மொத்தமாக ஐந்தாயிரத்திற்கும் அதிகமான கண்மாய்கள் உள்ளன.

மாவட்டத்தில் உள்ள விவசாயப்பெருங்குடி மக்களுக்கு பெரிதும் உதவிகரமாக அமையும் வண்ணம் நீர்நிலைகளை தூர்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜீத் அவர்கள் தனிநபர் பங்களிப்புடன் இன்று காலை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் கண்டரமாணிக்கம் அழ. கருப்பையா செட்டியார், ரவி வீரப்பன், சொக்கனேந்தல் கானாடுகாத்தான் முத்துராமன் , லெட்சுமி செராமிக்ஸ், கானாடுகாத்தான் மணிகண்டன், சிவகங்கை மாவட்ட திமுக ஐடி விங் வாடிவாசல் முத்துவேல் செல்வம் உள்ளிட்ட கிராமப்பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் திரளாக கலந்து கொண்டனர்...

## தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் நலச் சங்கம் ஆலோசனை கூட்டம்



தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் நலச் சங்கம் ஆலோசனை கூட்டம் – ஏப்ரல் 10 ஆர்ப்பாட்டத்திற்கான முடிவுகள்

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர் நலச் சங்கம் சார்பில் சென்னை திருவெற்றியூரில் நேற்று (01/04/2025) ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில், தொழிலாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் ஏப்ரல் 10ஆம் தேதி அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டது. ஆர்ப்பாட்ட ஆயத்த கூட்டம்: இந்த ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற, மாநில பொதுச் செயலாளர் K.குமார் தலைமையில் திருவெற்றியூர் மற்றும் எண்ணூர் பகுதி தோழர்கள் கலந்து கொண்டு ஆலோசனை நடத்தினர். சிறப்புத் தலைவராக கு.பாரதி வழிகாட்டுதல் வழங்கினார். முக்கிய முடிவுகள்: திருவள்ளூர் கிழக்கு மாவட்ட மாநில, மண்டல, பகுதி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க வேண்டுமென அழைப்பு விடுக்கப்பட்டது. திருவெற்றியூர் பகுதியில் டாஸ்மாக் ஊழியர்கள் சமூக விரோத கும்பல்களால் அச்சுறுத்தப்படுவது குறித்து சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க தொழிற்சங்க கூட்டமைப்பு முடிவு செய்தது. பகுதியில் உள்ள அனைத்து தொழிலாளர்களையும் ஒன்றிணைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. தமிழ்நாடு டாஸ்மாக் விற்பனையாளர்கள் நலச் சங்கம்.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM



தமிழ்நாடு மதுரை மாநகரில் இஸ்லாமியர்கள் சார்பில் ரமலான் நோன்பு முடிவு நாள் மதுரையில் தமுக்கம், கோரிப்|பாளையம் காஜிமார் தோப்பு போன்ற பல பள்ளிவாசல்களிலும் தொழுகை கொண்டாடபட்டது அதனைதொடர்ந்துதெற்குவாசல்பள்ளிவாசலிலும்மற்றும் மினா நூர்தீன் ஜும்ஆ பள்ளிவாசலில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்லாமியர் நண்பர்கள் ரமலான் 30ம் நாள் நோன்பு முடிவு நாளை சிறப்பு தொழுகையுடன் கொண்டாடினர்இதில்ஒவ்வொருவரும்புத்தாடைஅணிந்து தங்களது இன்பங்களை பரிமாறி கொண்டனர் மேலும் தொழுகை சிறப்பு ஏற்பாட்டினை மேனிங் டிரஸ்டிகள் கமர்தீன்மற்றும்அலிஅப்பர்அவர்களும்ஜமாத்குழுவினரும் மதிய உணவுடன் சிறப்பாக ஏற்பாடுகள் அனைத்தும் செய்திருந்தனர்

# தூத்துக்குடி கார் ஆலையில் வேலை என தகவலால் திரண்ட இளைஞர்கள்

தூத்துக்குடி, ஏப்.3

தூத்துக்குடி சில்லாநத்தம் சிப்காட் பகுதியில் 408 ஏக்கரில் ரூ.16 ஆயிரம் கோடியில் வியட்நாம் நாட்டைச் சேர்ந்த வின்பாஸ்ட் என்ற நிறுவனம், மின்சார கார் உற்பத்தி தொழிற்சாலையை அமைக்கிறது. இந்த நிறுவனத்தில் வரும் ஜூன் மாதத்தில் மின்சார கார் உற்பத்தி துவங்க உள்ளது.

இந்நிலையில் வின்பாஸ்ட் நிறுவனத்தில் வேலை வாய்ப்புக்கு ஏப்ரல் 1ம் தேதி நேர்முகத் தேர்வு நடைபெறுவதாக சமூக வலைதளங்களில் சில நாட்களாக தகவல்கள் பரவியது. இதை நம்பி தூத்துக்குடி,

சென்னை, மதுரை, நெல்லை, தென்காசி உள்பட பல



வேறு பகுதிகளில் இருந்து 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் நேற்று அங்கு குவிந்தனர். நிறுவனத்தினர் ஆள் தேர்வு என்ற செய்தி வதந்தி என்று தெரிவித்ததையடுத்து அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி னர்.

# தஞ்சை மீனாட்சி மருத்துவமனை சார்பில் சிஐ எஸ் எப் வீரர்களுக்கு வரவேற்பு

தஞ்சாவூர் மாவட்டம் :அதிராம்பட்டினம் காதிர் முகைதீன் கல்லூரியில் சிஐ எஸ் எப் வீரர்கள் சைக்கிள் பேரணியை தஞ்சை மீனாட்சி மருத்துவமனை சார்பாக வரவேற்றனர். மத்திய பாதுகாப்பு படை வீரர்கள் மார்ச் 7 முதல் சைக்கிள் பேரணி இரு பிரிவுகளாக தமிழகத்தில் செய்து வருகின்றனர். இதன் குறிக்கோள் கடலோர பாதுகாப்பு போதைப் பொருள் இல்லாத சமூகம் ஆகியவற்றை வலியுறுத்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெறுகிறது. இப்பேரணியை தஞ்சை மீனாட்சி மருத்துவமனை சார்பாக டாக்டர் சரவண வேல், பொது மேலாளர் பொறுப்பு செல்வ



பாண்டி மற்றும் மீனாட்சி மருத்துவமனை ஊழியர்கள் வரவேற்றனர். வீரர்களுக்கு இரவு விருந்து உபசரிக்கப்பட்டது.

# தமிழ்நாடு சட்டப்பேரவையில் வினாக்கள் விடை நேரத்தில் அமைச்சரிடம் காரைக்குடி எம்.எல்.ஏ. எஸ் மாங்குடி கீழ்குறிப்பிட்டுள்ள கேள்வி எழுப்பினார்

தமிழ்நாடு சட்டப்பேரவையில் வினாக்கள் விடை நேரத்தில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களிடம் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ் மாங்குடி அவர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள கேள்விகளை எழுப்பினார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டம்அருள்மிகு கொப்புடைய நாயகி அம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான வாரச்சந்தையில் 90 கடைகள் ரூ 1.50 கோடி மதிப்பீட்டில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது அது போதுமானதாக இல்லை கூடுதல் கடைகள்



கட்டி தரப்படுமா?

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டம் சங்கராபுரம் அருள்மிகு பொய்சொல்லா மெய்ய அய்யனார் திருக்கோயிலில் திருக்குடமுழுக்கு நடைபெற்று பல வருடங்கள் ஆகிவிட்டதால் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்தப்படுமா?

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சட்டமன்ற தொகுதி தேவகோட்டையில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை சார்பில் மகளிர் கலைக்கல்லூரி துவங்க அரசு முன்வருமா?

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி சட்டமன்ற தொகுதி தேவகோட்டையில் உள்ள சிலம்பணி சிதம்பர விநாயகர் திருக்கோயில் தேவஸ்தானத்திற்கு உட்பட்ட வெள்ளை ஊரணி பிள்ளையார் கோவிலை சுற்றியுள்ள வணிக வளாகத்திற்கு புதிய கட்டிடங்கள் கட்டித் தரப்படுமா?

இதற்கு பதிலளித்த மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் கூறிய கோரிக்கைகளுக்கு அதிகாரியிடம் கருத்துரு பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்கள்

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது அகில இந்திய மாநாடு வெண்மணி தியாகிகள் நினைவுக் கொடி பயணம் வாகனம் சிவகங்கை வந்தடைந்தது: மணியம்மா, மோகன், எஸ். உமாநாத், வெ. மதி. பங்கேற்பு

மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது அகில இந்திய மாநாடு மதுரையில் நடைபெறுகிறது.

இதில் பங்குகொள்ளும் வண்ணமாக வெண்மணியிலிருந்து தியாகிகள் நினைவுக் கொடிப்பயண குழுவினர் நேற்று மாலை சிவகங்கை வந்தடைந்தது.. திருப்புத்தூர் வந்தடைந்த கொடிப்பயண வாகனமானது சிவகங்கை அரண்மனை வாசல் பகுதிக்கு நேற்று மாலை வந்தடைந்தது...

மாவட்ட செயற்குழு உறுப்பினர் மணியம்மா மற்றும் மாவட்ட செயலாளர் மோகன், மாநில செயற்குழு உறுப்பினர்கள் ஜெயசீலன், சாமி நடராஜன் , வழக்கறிஞர் மதி ஆகியோர் தலைமையில் வரவேற்பளித்தனர்.

பின்னர் அரண்மனை வாசல் பகுதியில் கலைநிகழ்ச்சிகளுடன் தொடங்கி பின்னர் ஒன்றிய பாஜக அரசின் நடவடிக்கைகளுக்கு கண்டன உரையை நிகழ்த்தினர்..

இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள் கருப்புச்சாமி, ஆறுமு



கம், வீரபாண்டி, முத்துராமலிங்கபூபதி, வழக்கறிஞர் வெ. மதி, விஷ்வநாதன், கே. பி. முருகேசன், எஸ். உமாநாத், வழக்கறிஞர் இளையராஜா,மெய்யப்பன்,சுரேஷ், தென்னரசு, கொல்லங்குடி ஊராட்சி மேனாள் தலைவர் மெய்ஞானமூர்த்தி, பனையூர் தங்கராஜ், மூத்த தோழர் ஜபருல்லா உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்...

# அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் 77 ஆம் ஆண்டு விளையாட்டு விழா

அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் 77 ஆம் ஆண்டு விளையாட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரியில் நடைபெற்று வரும், ஐம்பெரும் விழாவின் முதல் நாள் நிகழ்வாக கல்லூரியின் 77 ஆம் ஆண்டு விளையாட்டு விழா இன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமி தலைமை வகித்து விளையாட்டு விழாவின் சிறப்புகளையும், மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்றதைப் பாராட்டியும் பேசினார். கல்லூரியின் விளையாட்டுக் குழு உறுப்பினரும், தாவரவியல் துறைத் தலைவருமான முனைவர் கோமளவல்லி வரவேற்புரை ஆற்றினார். அழகப்ப செட்டியார் அரசு பொறியியல் கல்லூரியின் மேனாள் உடற்கல்வி இயக்குநர் முனைவர் விஸ்வலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குபரிசுகள்வழங்கிசிறப்புரையாற்றினார். கல்லூரியின் முன்னாள் மாணவரும் தற்போதைய சிவகங்கை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் சதீஷ்குமார் மற்றும் கல்லூரியின் முன்னாள் மாணவரும்



மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தின் கால்பந்தாட்ட வீரருமான ராமநாதன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கல்லூரியின் விளையாட்டுக் குழு உறுப்பினரும், ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியருமானசமுனாஜெரின்அறச்செல்விநன்றிஉரையாற்றினார். விழாவில் ஏராளமான பேராசிரியர்களும், ஆசிரியர்களல்லாப் பணியாளர்களும் மாணவ மாணவிகளும் கலந்து கொண்டனர்.

# எடப்பாடி பழனிசாமிக்கு கோவை கோர்ட் சம்மன்: ஏப். 15ம் தேதி நேரில் ஆஜராக உத்தரவு

கோவை, ஏப்.3

ஏப்ரல் 15ம் தேதி நேரில் ஆஜராக எடப்பாடி பழனிசாமிக்கு கோவை கோர்ட் சம்மன் அனுப்பியுள்ளது. கோவை தடாகம் ரோடு பகுதியை சேர்ந்தவர் அதிமுக முன்னாள் எம்.பி. கே.சி.பழனிசாமி. இவர் தமிழ்நாடு முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி மீது, கோவை முதலாவது குற்றவியல் நீதிமன்றத்தில் (ஜே.எம்.1) அவதூறு வழக்கு



தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த வழக்கில் வரும் 15ம் தேதி எடப்பாடி பழனிசாமி நேரில் ஆஜராக சம்மன் அனுப்ப மாஜிஸ்திரேட் கோபாலகிருஷ்ணன் உத்தரவிட்டார். அதன்படி, எடப்பாடி பழனிசாமிக்கு நேற்று சம்மன் அனுப்பி வைக்கப்பட்டது. அதிமுகவில் ஒற்றை தலைமை விவகாரம் விஸ்வரூபம் எடுத்தபோது, கட்சியில் கோஷ்டிபூசல் வெடித்தது. அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

அப்போது, எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக அதிமுக ஒருங்கிணைப்பு குழுவில் இருந்த முன்னாள் எம்.பி. கே.சி.பழனிசாமி கருத்துக்களை தெரிவித்தார். கோவையில் நடந்த செய்தியாளர் சந்திப்பின்போது, ஒருங்கிணைப்பு குழு சம்பந்தமாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த எடப்பாடி பழனிசாமி, ஒருங்கிணைப்பு குழுவில் இருந்த தன்னை பற்றி அவதூறாக பேசியதாக கே.சி.பழனிசாமி இந்த அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# காவலர் குறை தீர்க்கும் சிறப்பு முகாம்: குறைதீர் மனுக்களை பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவு!

சென்னை, ஏப். 3

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் காவலர் குறை தீர்க்கும் சிறப்பு முகாமில், 50 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களிடமிருந்து குறைதீர் மனுக்களை பெற்று உடனடியாகநடவடிக்கைஎடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். சென்னை பெருநகர காவல்துறையினரின் பணி சிறக்க அவர்தம் குறைகளை போக்கி, காவலர் குடும்ப நலனுக்கு அதிகாரிகள் உதவிடும் வகையில், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், இ.கா.ப., அவர்கள் உத்தரவின்பேரில் 30.03.2025 அன்று காவலர் குறைதீர் சிறப்பு முகாம் நடத்தப்படஉள்ளதாக சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்தது.



அதன்பேரில், இன்று (01.04.2025) வேப்பேரி, காவல் ஆணையாளர் அலுவலக கலந்தாய்வு கூடத்தில் நடைபெற்ற ‘‘காவலர்கள் குறை தீர்க்கும் சிறப்பு முகாமில்‘‘ சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், இ.கா.ப, அவர்கள், சென்னை பெருநகர காவல், சட்டம், ஒழுங்கு, குற்றப்பிரிவு, போக்குவரத்து காவல் நிலையங்கள், ஆயுதப் படை மற்றும் சிறப்பு பிரிவுகளில் பணிபுரியும் 2 காவல் உதவி ஆணையாளர்கள், 2 காவல் ஆய்வாளர்கள், 10 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 36 காவல் ஆளிநர்கள் என 50 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களிடமிருந்து குறைதீர் மனுக்களை பெற்றார்.

இம்முகாமில் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்கள் பணிமாறுதல், தண்டனை களைதல், காவலர் குடியிருப்பு கோருதல், ஊதியம் குறைபாடு களைதல் உள்ளிட்ட மனுக்களை பெற்று, இம்மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்நிகழ்ச்சியில், சென்னை பெருநகர காவல், கூடுதல் ஆணையாளர் (தலைமையிடம்) கபில்குமார் சி சரட்கர், இ.கா.ப., காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் அமைச்சுப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு காரைவாய்க்கால் மாரியம்மன் கோயில் குண்டம் விழா: ஆயிரக்கணக்கான பக்தர்கள் தீ மிதித்து நேர்த்திக்கடன்

ஈரோடு, ஏப். 3

ஈரோடு பெரியமாரியம்மன் வகையறா கோயில்களில் ஒன்றான காரை வாய்க்கால் மாரியம்மன் கோயிலில் இன்று நடந்த குண்டம் விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தீ மிதித்து அம்மனுக்கு தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர். ஈரோடு மாநகரில் பெரியமாரியம்மன் கோயில் மற்றும் அதன் வகையறாவை சேர்ந்த சின்னமாரியம்மன், காரை வாய்க்கால் மாரியம்மன் கோயில்களில் மிகவும் பிரசித்தி பெற்றவை ஆகும். இந்த கோயில்களில் ஆண்டு தோறும் குண்டம், தேர்த்திருவிழா, கம்பம் பிடுங்கும் நிகழ்ச்சிகள் வெகு விமரிசையாக கொண்டாடப்படும். அதன்படி, நடப்பாண்டுக்கான திருவிழா கடந்த மாதம் 18ம் தேதி பூச்சாட்டுதலுடன்துவங்கி



யது. அதைத்தொடர்ந்து பெரியமாரியம்மன், சின்னமாரியம்மன், காரை வாய்க்கால் மாரியம்மன் ஆகிய மூன்று கோயில்களிலும் கடந்த மாதம் 22ம் தேதி கம்பங்கள் நடப்பட்டனது.

இதனையடுத்து ஈரோடு மாநகர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்த பக்தர்கள் மூன்று கோயில்களிலும் நடப்பட்ட கம்பத்திற்கு புனித நீர் மற்றும் பால் ஊற்றி வழிபட்டு வருகின்றனர். இந்நிலையில் விழாவின் முக்கிய நிகழ்வின் ஒரு பகுதியான காரை வாய்க்கால் மாரியம்மன் கோயில் குண்டம் விழா இன்று நடைபெற்றது. முன்னதாக நேற்று இரவு குண்டம் பற்ற வைக்கப்பட்டது. தொடர்ந்து இன்று அதிகாலை குண்டத்திற்கு சிறப்பு பூஜைகள் செய்து, கோயில் பூசாரிகள் குண்டம் இறங்கினர். பின்னர், காப்பு கட்டி விரதம் இருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து குண்டம் இறங்கி அம்மனுக்கு தங்களது நேர்த்திக்கடனை செலுத்தி வழிபட்டனர். விழாவையொட்டி, தீயணைப்பு வீரர்களும், போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

விழாவின் 2வது முக்கிய நிகழ்வான பொங்கல் விழா மற்றும் தேரோட்டம் நாளை(2ம் தேதி) நடைபெற உள்ளது. இதில், நாளை காலை 9 மணிக்கு பொங்கல் விழாவும், அதைத்தொடர்ந்து, சின்ன மாரியம்மன் கோயில் தேரோட்டமும் நடக்கிறது. வருகிற 5ம் தேதி(சனிக்கிழமை) கம்பம் எடுக்கும் விழாவும், மஞ்சள் நீராட்டும் நடக்கிறது. 6ம் தேதி மறுபூஜையுடன் விழா நிறைவு பெறுகிறது.

# கப்பலூர் மேம்பாலத்தில் கன்டெய்னர் லாரி கவிழ்ந்து விபத்து: டிரைவர் படுகாயம்; போக்குவரத்து பாதிப்பு

திருமங்கலம், ஏப் .3

கப்பலூர் மேம்பாலத்தில் இன்று காலை கன்டெய்னர் லாரி கவிழந்ததில் டிரைவர் படுகாயமடைந்தார். இந்த விபத்தால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. திண்டுக்கல்லில் இருந்து தேங்காய் நார் ஏற்றிக்கொண்டு தூத்துக்குடி நோக்கி இன்று காலை கன்டெய்னர் லாரி சென்றுகொண்டிருந்தது. மதுரை நான்குவழிச் சாலை வழியாக கப்பலூர் மேம்பாலத்தில் ஏறிய லாரி தூத்துக்குடி செல்லும் ரிங்ரோடு சாலையில் காலை 10.15 மணியளவில் திரும்பியது. அப்



போது திடீரென கட்டுப்பாட்டை இழந்து பாலத்தின் மைய பகுதியில் கவிழ்ந்தது. இதில் லாரியில் இருந்து கன்டெய்னர் தனியாக பிரிந்து பாலத்தில் மற்றொரு பகுதியில் விழுந்தது. இந்த விபத்தில் லாரி டிரைவர் தூத்துக்குடியை சேர்ந்த தங்கராஜ் படுகாயமடைந்தார். பாலத்தில் லாரி கவிழ்ந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

விபத்து குறித்து தகவல் அறிந்த திருமங்கலம் டவுன் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்துவந்து, படுகாயமடைந்த லாரி டிரைவரை மீட்டு கிசிச்சைக்காக திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விபத்துக்குள்ளான கன்டெய்னர் லாரியை கிரேன் மூலம் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. போக்குவரத்தை சீர்படுத்தும் பணியில் போலீசார் ஈடுபட்டுள்ளனர். மேலும் விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சிக்காக தொட்டிகளில் மண் நிரப்பும் பணி

ஊட்டி, ஏப். 3

மலர் கண்காட்சிக்காக ஊட்டி தாவரவியல் பூங்காவில் தொட்டிகளில் மண் நிரப்பும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் உள்ள பூங்காக்கள் கோடை சீசனுக்காக தயார் செய்யும் பணியில் தோட்டக்கலை துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதில், மலர் கண்காட்சிக்காக ஊட்டி தாவரவியல் பூங்காவில் உள்ள தொட்டிகளில் இயற்கை உரம் கலந்த மண் நிரப்பும் பணியில் ஊழியர்கள் தீவிரமாக இறங்கியுள்ளனர். ஆண்டுதோறும் மே மாதம் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. இதனை காண வெளி நாடுகள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்துச் செல்கின்றனர்.



இங்கு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க ஆண்டுதோறும் 35 ஆயிரம் தொட்டிகளில் பல்வேறு வகையான மலர் செடிகளை தரம் பிரித்து, அவைகள் அனைத்தும் மாடங்களில் அலங்கரித்து வைக்கப்படுவது வழக்கம். கோடை சீசன் துவங்கிய நிலையில், மலர் கண்காட்சிக்காக தாவரவியல் பூங்காவில் பராமரிப்பு பணிகள், புல் மைதானம் சீரமைக்கும் பணி என பல்வேறு பணிகள் நடந்து வருகிறது. இந்நிலையில், பல ஆயிரம் தொட்டிகளில் தொடர்ந்து நடவு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்காக இயற்கை உரம் கலந்த தொட்டிகளில் மண் நிரப்பு பணிகள் நடந்து வருகிறது. ஓரிரு நாட்களில் இந்த தொட்டிகளில் மலர்கள் பூக்கும் காலத்தை பொறுத்து நாற்று நடவு செய்யும் பணிகள் துவக்கப்படவுள்ளது.

# கீழப்பூங்குடி கிளைக்கழகத்தில் 2072 பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் பட்டிமன்றம் சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக செயற்குழு கூட்டத்தில் திருமலை முத்துராமலிங்கம் தகவல்

**திருமலை முத்துராமலிங்கம், பாலுச்சாமி, பவானி கணேசன், மதிவாணன், கிங் கார்த்திக் பங்கேற்பு**



சிவகங்கை மாவட்ட திமுக செயலாளரும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் அவர்களின் ஆலோசனையின் பேரில் அவைத்தலைவர் பாலுச்சாமி தலைமையிலும் துணைச்செயலாளர் வில்லிபட்டி பண்ணையார் ஆ. இராமமூர்த்தி, பொருளாளர் தொமுச முருகேசன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ். எம். மதிவாணன், கிங் கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகிக்க செயற்குழு கூட்டமானது நடைபெற்றது...

சிவகங்கை வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் திருமலை ஆ. முத்துராமலிங்கம் கலந்து கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களது 72 வது பிறந்தநாள் விழா வினை முன்னிட்டு தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மற்றும் கல்வியியல் பணிகள் குழுமத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி தலைமையிலான பட்டிமன்றம் மற்றும் 2072 பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழாவை சிவகங்கை வடக்கு ஒன்றியம் கீழப்பூங்குடி கிளைக்கழகத்தில் சிறப்பாக நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்களை நிறைவேற்றி பேசினார்..

இந்த செயற்குழு கூட்டத்தில் மாவட்ட பிரதிநிதிகள் ஒக்கூர் சோமசுந்தரம், மேனாள் சேர்மன் தமறாக்கி முத்துராமலிங்கம், சோழபுரம் மாரி, மாவட்ட விவசாய தொழிலாளரணி மேனாள் ஊராட்சி தலைவர் தமறாக்கிரவி, ஊராட்சி மேனாள் தலைவர் கணா டாங்கிபட்டி மந்தக்காளை, ஐடி விங் தமறாக்கி அம்பலம், ஒன்றிய நிர்வாகிகள் இடையமேலூர் நா.சேகர். இலக்கிய அணி திருமலை மணிமாறன், அவைத்தலைவர் தினகரன், மேனாள் கவுன்சிலர் விவசாய அணி கருப்பணன், மேனாள் கவுன்சிலர் சுந்தரராஜமூர்த்தி, அரிச்சந்திரன், இளஞ்செழியன், முருகானந்தம், ஒக்குப்பட்டி தவமணி, இளைஞரணி கண்டாங்கிபட்டி சரவணன், விளையாட்டு மேம்பாட்டு அணி நாராயணன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தின் இறுதியில் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இடையமேலூர் வேல்முருகன் நன்றி கூறினார்...

# மெரினாவில் தற்கொலைக்கு முயன்ற 2 பெண்களை மீட்ட காவலர்களுக்கு காவல் ஆணையர் பாராட்டு



சென்னை, ஏப் 3

பெற்றோர்க்கு இடையேயான சண்டையினால் மெரினா பகுதி கடலில் இறங்கி தற்கொலைக்கு முயன்ற 2 மகள்களை துரிதமாக காப்பாற்றிய காவல் ஆளினர்களை காவல் ஆணையாளர் வெகுமதி வழங்கி பாராட்டினார். சென்னை பெருநகர காவல், D5 மெரினா காவல் நிலைய தலைமைக்காவலர் B.குமரேசன், காவலர் M.சங்கர் குமார் N.முருகன் ஆகிய மூவரும் கடந்த 30.03.2025 அன்று இரவு மெரினா, விவேகானந்தர் இல்லம் எதிர்புறம் உள்ள கடற்கரையில் கண்காணிப்பு பணியிலிருந்த போது, அங்கு 2 பெண்கள் கடலில் இறங்கி தற்கொலைக்கு முயன்றதை பார்த்ததும்,

மேற்படி காவலர்கள் மூவரும் விரைந்து சென்று கடலில் இறங்கி தற்கொலைக்கு முயன்ற 2 பெண்களையும் மீட்டு கடற்கரைக்கு கொண்டு வந்தனர்.

விசாரணையில் 2 பெண்களும் அவர்களது தாய் தந்தையருக்கு இடையே கருத்து வேறுபாடு காரணமாக, அவர்களது தாயார் தந்தையிடமிருந்து விவகாரத்து கேட்க உள்ளதாக கூறியதால் மனமுடைந்து தற்கொலைக்கு முயன்றது தெரிய வந்தது. மீட்கப்பட்ட 2 பெண்களும் விசாரணைக்குப்பின்னர் உறவினரிடம் பத்திரமாக ஒப்படைக்கப்பட்டனர். மேற்படி சம்பவத்தில் துரிதமாக செயல்பட்டு, தற்கொலைக்கு முயன்ற 2 பெண்களை காப்பாற்றிய D5 மெரினா காவல்நிலைய தலைமைக்காவலர் B.குமரேசன், காவலர் சங்கர் குமார், முருகன் ஆகிய மூவரை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், இன்று நேரில் அழைத்து பாராட்டி வெகுமதி வழங்கினார்.

# கைலாசாவுக்கு தப்பி ஓடிய நித்தியானந்தா இறந்து விட்டாரா? சகோதரி மகன் பரபரப்பு தகவல்; ரூ.4000 கோடி சொத்து யாருக்கு?

சென்னை, ஏப்.3

பல்வேறு சர்ச்சைகளில் சிக்கிய பிரபல சாமியார் நித்தியானந்தாவை கைது செய்ய போலீசார் முயற்சி செய்ததைத் தொடர்ந்து அவர் இந்தியாவை விட்டு வெளியேறினார். தென் பசிபிக் கடலில் உள்ள தீவு ஒன்றை விலைக்கு வாங்கி அவர் அத்தீவுக்கு கைலாசா என்று பெயர் வைத்து அங்கேயே தங்கிவிட்டதாக கூறப்படுகிறது. அத்தீவை ஆட்சி செய்வதாக கூறிய நித்தியானந்தா, அங்கிருந்தே சொற்பொழிவு ஆற்றிவந்தார்.

இதற்கிடையே, கடந்த 2002ம் ஆண்டு நித்தியானந்தா நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டதாக தகவல் பரவியது. ஆனால், இத்தகவலை மறுத்த நித்தியானந்தா 27 டாக்டர்கள் தனக்கு சிகிச்சை அளித்து வருவதாகவும், விரைவில் பரிபூரண நலம் பெற்று திரும்புவேன் என்றும் கூறியிருந்தார். அதன்பிறகு, கடந்தசில ஆண்டுகளாக வீடியோ எதிலும் நித்தியானந்தா தோன்றவில்லை. இந்நிலையில், கடந்த 2 நாட்களுக்கு முன்பு உடல் நலக்குறைவு காரணமாக நித்தியானந்தா உயிரிழந்துவிட்டதாக தகவல் வெளியாகி இருக்கிறது. நித்தியானந்தாவின் சகோதரி மகன் சுந்தரேஸ்வரன் காணொலி காட்சி மூலம் ஆற்றிய ஆன்மிக சொற்பொழிவில், ''இந்து தர்மத்தை காப்பதற்காக நித்தியானந்தா உயிர் தியாகம் செய்துவிட்டார்'' என கூறி உள்ளார். இதனால் நித்தியானந்தாவின் பக்தர்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். உண்மையில் நித்தியானந்தா இறந்துவிட்டாரா? அல்லது போலீஸ் வழக்கில் இருந்து தப்பிப்பதற்கான அவரின் புதிய யுக்தி இதுவா? என சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. ஒருவேளை உண்மையிலேயே நித்தியானந்தா இறந்திருந்தால், அவருடைய ரூ.4 ஆயிரம் கோடி சொத்துகளுக்கு யார் அதிபதி என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

# இளைஞர்கள் தற்கொலைக்கு ஆன்லைன் விளையாட்டு மட்டுமே காரணமல்ல: உயர் நீதிமன்றத்தில் ஆன்லைன் நிறுவனம் வாதம்

சென்னை, ஏப். 3

இளைஞர்கள் தற்கொலைக்கு பல காரணங்கள் இருக்கும் போது, திறமைக்கான ஆன்லைனில் ரம்மி விளையாடுவதால் தற்கொலை செய்து கொள்வதாக கூறுவதை ஏற்க முடியாது என்று ஆன்லைன் நிறுவனம் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆன்லைன் விளையாட்டுகளுக்கு அடிமையாகி கடன் தொல்லையால் பல இளைஞர்கள் தற்கொலை செய்து கொண்டதால், ஆன்லைன் விளையாட்டுக்களை முறைப்படுத்த 2022ம் ஆண்டு ஆன்லைன் சூதாட்ட தடை மற்றும் ஆன்லைன் விளையாட்டுக்கள் ஒழுங்குமுறைச் சட்டத்தை தமிழக அரசு கொண்டு வந்தது.

இந்தசட்டத்தைஎதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த உயர் நீதிமன்றம், ஆன்லைன் விளையாட்டுக்களுக்கு தடை விதித்ததை உறுதி செய்ததுடன், திறமைக்கான ஆன்லைன் ரம்மி, போக்கர் (ஒருவகையான சீட்டாட்டம்) விளையாட்டுக்களுக்கான விதிகளை வகுக்க 2023ம் ஆண்டு உத்தரவிட்டது. நீதிமன்ற உத்தரவின்படி ஆன்லைன் விளையாட்டுக்களை ஒழுங்குமுறைபடுத்த விதிமுறைகளை வகுத்து 2025ம் ஆண்டு தமிழ்நாடு அரசு அரசிதழில் வெளியிட்டது. அதில், பணம் செலுத்தி விளையாடும் ஆன்லைன் விளையாட்டுகளில் பங்கெடுக்க 18 வயதுக்கு குறைவான சிறார்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆன்லைன் விளையாட்டுக்களை விளையாட ஆதார் இணைப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

விளையாட்டில் பங்கெடுப்போர் ஒரு மணி நேரத்துக்கு மேல் விளையாடும் போது, அரை மணி நேரத்திற்கு ஒருமுறை எச்சரிக்கை குறுஞ்செய்திகளை அனுப்பும் வசதியை ஏற்படுத்த வேண்டும். விளையாடுவோர் ஒரு நாளைக்கு ஒரு வாரத்துக்கு, ஒரு மாதத்துக்கு குறிப்பிட்ட அளவு மட்டுமே பணம் வைத்து விளையாட வேண்டும் என்று வரம்பு நிர்ணயிக்க வேண்டும். நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 5 மணி வரை யாரையும் விளையாட அனுமதிக்க கூடாது என்று கூறப்பட்டுள்ளது.

இந்த விதிகளை எதிர்த்து, பிளே கேம்ஸ், ஹெட் டிஜிட்டல் வொர்க்ஸ் மற்றும் எஸ்போர்ட் ப்ளேயர்ஸ் நலச் சங்கம் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அதில், வர்த்தக உரிமையை பாதிக்கும் வகையில் அமைந்துள்ள தமிழக அரசின் புதிய விதிகள் அரசியல் சட்டத்திற்கு எதிரானது என கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கு நீதிபதிகள் எஸ். எம்.சுப்பிரமணியம் மற்றும் கே.ராஜசேகர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, ஆன்லைன் நிறுவனம் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர், ஆன்லைனில்ரம்மிவிளையாடுவதை அடிமைப்படுத்துவதாக கருத முடியாது. நீண்ட நேரம் சுய நினைவுடன் பயன்படுத்துவதாகவே கருத வேண்டும்.

ஒன்பது வகையான அறிவியல் காரணங்களுடன் ஆன்லைன் விளையாட்டு அடிமைப்படுத்தும் என்று விதியில் குறிப்பிட்டுள்ளது ஏற்புடையது அல்ல. ஆன்லைன் விளையாட்டு திறமைக்கானது. திறமையாக விளையாடுபவர்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. பல விளையாட்டுகளில் நீண்ட நேரம் செலவிடும் நிலையில், திறமைக்கான ஆன்லைன் ரம்மி அடிமைப்படுத்தும் என்பதை ஏற்க முடியாது. தற்கொலைக்கு பல காரணங்கள் இருக்கின்றன. ஆன்லைன் விளையாட்டில் பணம் இழந்ததற்காக மட்டுமே தற்கொலை செய்து கொண்டதாகதமிழகஅரசு கூறுவதை ஏற்க முடியாது என்று தெரிவித்தார். இதையடுத்து, தமிழக அரசு தரப்பு வாதத்திற்காக வழக்கு விசாரணையை ஏப்ரல் 4ம் தேதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

# முல்லை பெரியாறு அணை குறித்து சர்ச்சை 'எம்புரான்' பட வசனம் நீக்க விவசாய சங்கம் ஆர்ப்பாட்டம்



உசிலம்பட்டி, ஏப்.4

முல்லை பெரியாறு அணை குறித்து எம்புரான் திரைப்படத்தில் வரும் சர்ச்சை காட்சிகள், வசனங்களை நீக்க கோரி விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நடிகர் மோகன்லால் நடிப்பில் வெளியான 'எம்புரான்' திரைப்படத்தில், முல்லை பெரியாறு அணை குறித்து பல்வேறு சர்ச்சையான வசனங்களும், அணையை இடிக்க வேண்டும் என காட்சியமைப்பும் உள்ளதாகவும், இரு மாநில மக்களிடையே பிரச்னையை தூண்டும் வகையில் உள்ள அவற்றை நீக்கக் கோரியும் தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்கம், உசிலம்பட்டி 58ம் கால்வாய் பாசன சங்கம் மற்றும் மக்கள் அதிகாரம் அமைப்பு உள்ளிட்டவை இணைந்து மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தேவர் சிலை முன்பு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எம்புரான் திரைப்படத்தை தமிழ்நாட்டில் திரையிட அனுமதிக்கக் கூடாது, தடை செய்ய வேண்டும் என வலியுறுத்தி கோஷமிட்டனர். ஆர்ப்பாட்டத்தின் போது, எம்புரான் திரைப்படத்தின் இயக்குனர் ப்ரித்திவிராஜ், நடிகர் மோகன்லால், தயாரிப்பாளர் கோபாலன் ஆகியோரின் புகைப்படங்களை செருப்பால் அடித்து, கிழித்து எறிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த உசிலம்பட்டி நகர் போலீசார், கிழிக்கப்பட்ட புகைப்படங்களைபோராட்டக்காரர்களிடம் இருந்து பறிமுதல் செய்தனர்.

# உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம்; இரண்டு ஆண்டுகளில் 1,253 பணிகள் ரூ.14,466 கோடியில் நடைபெற்றுள்ளது: துணை முதல்வர் பதில்



சென்னை, ஏப். 3

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசும் போது, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம் குறித்து சில குற்றச்சாட்டுக்களை தெரிவித்தார்.

இதற்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதில் அளித்து பேசியதாவது:

வ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாத, அவசியத் தேவைகளை அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளின் பேரில் நிறைவேற்றுவதற்காக, ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று பேரவையில் முதல்வர் அறிவித்திருந்தார். இதுகுறித்து, 10 கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பிவைக்குமாறு முதல்வர் கேட்டுக்கொண்டார்.

அதனடிப்படையில், மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக 2 ஆயிரத்து 437 பணிகளுக்கான முன்மொழிவுகள் அரசுக்கு வரப்பெற்றன. அவை துறைவாரியாக உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டு, பரிசீலிக்கப்பட்டன. 202324ம் நிதியாண்டில் 784 பணிகள் கிட்டத்தட்ட 11,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் இதுவரை 367 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

02425ம் நிதியாண்டில், 469 பணிகள், 3 ஆயிரத்து 503 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் இதுவரை 65 பணிகள் முடிவுற்ற நிலையில், மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆக மொத்தம் இந்த திட்டத்தின்கீழ், கடந்த இரண்டு ஆண்டுகளில் 1,253 பணிகள், 14 ஆயிரத்து 466 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு துறைகளில் நடைமுறையில் உள்ள திட்டங்களின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

எதிர்க்கட்சி தலைவருடைய எடப்பாடி தொகுதியைப் பொறுத்தவரையில், அவர் சார்பில் மொத்தம் 10 கோரிக்கைகள் பெறப்பட்டன. அவற்றில், 4 பணிகள் செயல்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன; அதில் 3 பணிகள் நிறைவேற்றப்பட்டு, ஒரு பணி தற்போது நடைபெற்று வருகிறது. அவர் கொடுத்துள்ள கோரிக்கைகளில், மீதமுள்ள 6 பணிகளைப் பொறுத்தவரையில், ஒரு பணி துறையின் பரிசீலனையில் தற்போது உள்ளது. இதர 5 பணிகள் சாத்தியமில்லை என்று கண்டறியப்பட்டு, அவற்றிற்கு பதிலாக மாற்றுப் பணிகளைக் குறிப்பிட்டு வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகக் கேட்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றுப் பணிகளை பரிசீலனை செய்து நிறைவேற்றுவதற்கான உரிய நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்படும். முதல்வர்இந்தத்திட்டத்தை அறிவிக்கும் போது குறிப்பிட்டவாறு, எந்தவிதமான கட்சிப் பாகுபாடின்றி இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

# புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கட்டப்படும் கட்டிடங்கள் ஸ்டாலின் கட்டிடக் கலை என்று பிற்காலத்தில் பதிவு செய்வார்கள்: அமைச்சர் எ.வ.வேலு பதிலுரையில் பெருமிதம்

சென்னை ஏப் 3

நூற்றாண்டு நிலைத்து நிற்கும் வகையில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது என்றும், இந்த கட்டிட கலைக்கு ஸ்டாலின் கட்டிடக் கலை என்று பிற்காலத்தில் பதிவு செய்வார்கள் என்றும் அமைச்சர் எ.வ.வேலு பதிலுரையில் கூறினார். சட்டப்பேரவையில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்கு பதிலளித்து அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:

பாரம்பரிய கட்டிடங்களை புதுப்பிக்கவும், மறுசீரமைக்கவும் சென்னையை தலைமையிடமாக கொண்டு, 2024 அக்டோபர் 4ம் தேதி புதிதாக மரபு கட்டிடங்கள் வட்ட அலுவலகம் உருவாக்கப்பட்டுள்ளது. திருச்சியில் 16ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ராணி மங்கம்மாள் அரண்மனை ரூ.9 கோடி மதிப்பீட்டிலும், அங்கு, 17ம் நூற்றாண்டில் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்ட ராணி மங்கம்மாள் கொலு மண்டபம் எனும் சொக்கநாத நாயக்கர் அரண்மனை ரூ.29 கோடி மதிப்பீட்டிலும் புதுப்பிக்கப்படுகின்றன.

கலைஞர் நினைவிடத்தில் கலைஞர் உலகம் அருங்காட்சியகம் தரைமட்டத்தில் இருந்து 15 அடிக்குக் கீழ் அமைந்துள்ள நிலவறையாகும். இந்த அருங்காட்சியகத்தில் கலைஞர் உலகம் அருங்காட்சியகம் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, கலைஞரின் வாழ்க்கை வரலாறு அனைவரையும் கவரும் வகையில் அழகுறச் சித்தரிக்கப்பட்டு உள்ளது. இந்த அருங்காட்சியகத்தை 5.32 லட்சம் பேர் கண்டுகளித்துள்ளனர். புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, கட்டப்பட்ட, கட்டிடங்கள் பல நூறாண்டுகளுக்குநிலைத்து நிற்கும். இந்த கட்டிட கலையை ஸ்டாலின் கட்டிடக் கலை என்று பிற்காலத்தில் பதிவு செய்வார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

# மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் ராமேஸ்வரத்தில் பிரதமருக்கு எதிராக கருப்புக்கொடி: அகில இந்திய மீனவர் காங்கிரஸ் அறிவிப்பு

ராமேஸ்வரம், ஏப். 3

மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்காவிடில், ராமேஸ்வரம் வரும் பிரதமர் மோடிக்கு கருப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்துவோம் என அகில இந்திய மீனவர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. அகில இந்திய மீனவர் காங்கிரஸ் தேசிய தலைவர் எஸ்.ஆம்ஸ்ட்ராங் பெர்னாண்டோ நேற்று வெயிட்டுள்ள அறிக்கையில், ''2014ம் ஆண்டு பாஜ ஆட்சிக்கு வந்த பிறகு தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் அடக்குமுறை அதிகரித்துள்ளது.

பிரதமர் மோடியின் பலவீனமான பாஜ அரசினால் தான் இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழக மீனவர்களுக்கு அபராதமும், படகுகளை நாட்டுடமையாக்கும் சட்டமும் கடந்த 2018ல் கொண்டு வரப்பட்டது. இந்நிலையில், ஏப்ரல் 4 அன்று இலங்கை செல்லும் பிரதமர் மோடி, அங்கு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழக, புதுச்சேரி மாநில மீனவர்களை விடுதலை செய்ய இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.



இதை நிறைவேற்றி தராத பட்சத்தில், புதிய பாம்பன் பாலத்தை திறப்பதற்காக ராமேஸ்வரத்திற்கு ஏப். 6ம் தேதி வரும், பிரதமர் மோடியை கண்டித்து மீனவர்களை திரட்டி கருப்புக் கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இதில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளார்கள்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராமேஸ்வரம் அருகே பாம்பன் கடலில் கட்டப்பட்டுள்ள புதிய ரயில் பாலத்தை பிரதமர் மோடி வரும் 6ம் தேதி திறந்து வைக்கவுள்ளார். பாதுகாப்பு கருதி ராமேஸ்வரம், தங்கச்சிமடம், மண்டபம், பாம்பன் உள்ளிட்ட தீவு முழுவதும் நாளை மறுநாள் (ஏப். 4) முதல் 6ம் தேதி வரை 3 நாட்கள் மீனவர்கள் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

# ராம நவமியன்று இந்து மக்கள் கட்சி நடத்தவுள்ள ராம ரத யாத்திரைக்கு அனுமதி தரப்படவில்லை: சென்னை உயர் நீதிமன்றத்தில் காவல்துறை தகவல்

சென்னை, ஏப். 3

இந்து மக்கள் கட்சி தரப்பில் ராமநவமி தினத்தில் ராம ரத யாத்திரை நடத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக காவல்துறை சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. ராம நவமி தினத்தையொட்டி வரும் ஏப்ரல் 6ம் தேதி சேலம் அயோத்தியப்பட்டினத்தில் ராம ரத யாத்திரை நடத்த அனுமதி கோரி இந்து மக்கள் கட்சியின் சேலம் மாவட்ட தலைவர் பெரியசாமி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அந்த மனுவில், இந்து மக்கள் கட்சி சார்பில், வரும் ஏப்ரல் 6ம் தேதி நடத்தப்படும் ராம ரத யாத்திரை சிறப்பு பூஜையுடன் சேலம் அயோத்தியாபட்டினத்தில் தொடங்கி, உடையப்பட்டி அம்மாப்பேட்டை ரவுண்டானா வழியாக சென்று, சவுந்தரராஜா பெருமாள் கோயிலில் தீபாராதனை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, சின்னக்கடை, பெரியக்கடை வீதி வழியாக செவ்வாய்பேட்டை பாண்டுரங்கன் கோயிலில் சிறப்பு பூஜையுடன் நிறைவடைகிறது.

இது தொடர்பாக அனுமதி கோரி தமிழக அரசு, காவல்துறை ஆகியோருக்கு மனு அளித்தும், இதுவரை எந்த

பதிலும் இல்லை என்று கூறப்பட்டிருந்தது. இந்த மனு நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது காவல்துறை தரப்பில், சேலம் அம்மாப்பேட்டை உதவி ஆ

ணையர் கடந்த மார்ச் 31ம் தேதி ரத யாத்திரைக்கு அனுமதி மறுத்து உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இதனை பதிவு செய்த நீதிபதி, காவல் துறை அனுமதி வழங்க மறுத்த உத்தரவை எதிர்த்து வழக்கு தொடரலாம் எனக்கூறி வழக்கை முடித்து வைத்தார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

3.4.2025



மதுரை பாஜக வழக்கறிஞர் பிரிவு மதுரை மாவட்ட தலைவரும் வழக்கறிஞருமான ஐயப்ப ராஜா அவர்களுக்கு மத்திய அரசு வழக்கறிஞராக பொறுப்பேற்றதற்கு வழக்கறிஞர்களும் கட்சி நிர்வாகிகள் அனைவரும் வழக்கறிஞர் துறையிலும் கட்சி சார்ந்த செயல்களிலும் மென்மேலும் வளர வேண்டும் என்று வாழ்த்து தெரிவித்தனர்.





மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வடக்கு அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் மேயர் இந்திராணி பொன்வசந்த் பொதுமக்களிடமிருந்து மனுக்களைபெற்றுக்கொண்டார்.அருகில்ஆணையாளர்சித்ராவிஜயன்,மண்டலத்தலைவர் சரவணபுவனேஸ்வரி, உதவி ஆணையாளர் கோபு மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## வடக்கு ஒன்றிய அ.ம.மு.க. சார்பில் நீர் மோர் பந்தல்



அம்மா மக்கள் முன்னேற்ற கழகப் பொதுச்செயலாளர் டிடிவி_தினகரன் அவர்களின் மேலான ஆணைக்கிணங்க கல்லல் வடக்கு ஒன்றிய சார்பில் நீர் மோர் பந்தல் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் தேர்போகி பாண்டி எம் பி ஏ அவர்கள் திறந்து வைத்தார்

சிவகங்கை மாவட்டம் கல்லல் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ வாசு தலைமையில் மக்களின் தாகம் தீர்க்கும் #நீர்_மோர்_பந்தல் திறப்பு விழா ஒன்றிய அலுவலகத்தில் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் #தேர்போகி_V_பாண்டி_MBA அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், கழக நெசவாளரணி தலைவர் அம் சக்கண்ணன் மாவட்ட துணை செயலாளர் சோமசுந்தரம், காரைக்குடி பொதுக்குழு உறுப்பினர் பழனி பெரியசாமி, மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச்செயலாளர் பந்தா பாண்டி, மாவட்ட இளம்பெண் பாசறை துணை செயலாளர் தம்பி செல்வா, தட்டட்டி ஊராட்சி கழக செயலாளர் ஏ ஆர் காமராஜ்,மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஆன்லைன் ரம்மியில் ரூ.10 லட்சம் இழந்த வங்கி மேலாளர் ரயிலில் பாய்ந்து தற்கொலை



நாமக்கல், ஏப்.3

திருச்சி மாவட்டம், தொட்டியத்தை அடுத்த பிடாரமங்கலம் தேவர்ம லையை சேர்ந்தவர் ஜெயக்குமார் (34). இவர், ஈரோடு மாவட்டம், முத்தூரில் உள்ள கரூர் வைஸ்யா வங்கியில் உதவி மேலாளராக பணியாற்றி வந்தார். ஜெயக்குமார் ஆன்லைன் விளையாட்டில் கடந்த சில மாதங்களில் ரூ.10 லட்சம் வரை இழந்துள்ளதாக கூறப்படுகிறது. இதைத்தொடர்ந்து தனது மனைவியிடம், ரூ.2 லட்சம் கேட்டு தகராறு செய்துள்ளார். இந்நிலையில்,நெய்க்காரன்பட்டியில்உள்ளஉறவினர்வீட்டிற்கு நேற்று முன்தினம் சென்ற ஜெயக்குமார் தற்கொலைக்கு முயன்றுள்ளார். உறவினர்கள் தடுத்துவிட்டனர். நேற்று மாலை 3 மணியளவில், நெய்க்காரப்பட்டி ரயில்வே தண்டவாள பகுதிக்கு சென்றவர், எக்ஸ்பிரஸ் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.



சிவகங்கைமாவட்டம்காரைக்குடிஈதிகாமைதானத்தில்ரம்ஜான்பெருநாள்தொழுகையை முன்னிட்டு இஸ்லாமியர்கள் ரம்ஜான் தொழுகை முடிந்தவுடன் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் சா மாங்குடி அவர்களுக்கு காரைக்குடி தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் மற்றும் மனிதநேய மக்கள் கட்சி சார்பில் மாநகர பொருளாளர் ஹைதர் அலி அம்பலம் பொன்னாடை அணிவித்து மகிழ்ச்சியுடன் உடன் மாவட்ட பொருளாளர் அன்சாரி மற்றும் மாவட்ட வர்த்தக அணி செயலாளர் கரீம் சாகுல், மமக மாவட்ட இளைஞர் அணி செயலாளர் முஜி கனி , தமுமுக மாவட்ட பிரச்சாரப் பேரவை செயலாளர் நசீர் அகமது, அதனைத் தொடர்ந்து குறிப்பாக மாநகர தலைவர் பீர் முகமது அவர்கள் மற்றும் மமக மாநகர செயலாளர் சுல்தான், தமுமுக மாநகர செயலாளர் ரியாஸ், தமுமுக மாநகர துணைச் செயலாளர் சித்திக்,மமக மாநகர இளைஞரணி செயலாளர் சேக் முகமது, தமுமுக மாநகரத் தொண்டர் அணி இர்ஃபான் அகமது, தமுமுக மாநகர விளையாட்டு அணி செயலாளர் அசார், மற்றும் கிளை நிர்வாகிகள் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட காரைக்குடி மையமாக கொண்ட காரைக்குடி உட்கோட்ட காரைக்குடி தெற்கு காவல் நிலையம் எல்லைக்கு உட்பட்ட நடராஜா தியேட்டர் அருகில் மாவட்ட கண்காணிப்பாளர் ஆசிஷ் ராவத்(இகாப) அவர்கள் உத்தரவு பேரில் துணை காவல் கண்காணிப்பாளர் பார்த்திபன் (தகாப)அவர்கள் மேற்பார்வையில் தெற்கு காவல் நிலைய ஆய்வாளர் சதீஷ் அவர்கள் தலைமையில் சார்பு ஆய்வாளர் மலைச்சாமி முன்னிலையில் ஆயுதபடை சார்பு ஆய்வாளர் சரோஜினி மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் சரவணன் மற்றும் காவலர்கள் கார்த்திக், கார்த்திக் ராஜா, சந்தானகிருஷ்ணன்,சேவர்கொடியோன்,ராஜ்குமார்ஆகியோர்பொதுமக்களுக்குகனிவான முறையில் போக்குவரத்து விதிமுறைகளை முறையாக கடைபிடிக்க வேண்டும் என்று ரோந்து பணியில் ஈடுபட்டனர்

## நானியின் ஹிட் 3 புதிய போஸ்டர் வெளியீடு...!





தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகராக வலம் வருபவர் நானி. கடைசியாக இவர் நடிப்பில் வெளியான படம் 'சூர்யாவின் சனிக்கிழமை'. பிரியங்கா மோகன் கதாநாயகியாக நடித்திருந்த இப்படம் ரூ. 100 கோடிக்கு மேல் வசூல் செய்திருந்தது.

இப்படத்தை தொடர்ந்து நானி, 'ஹிட் 3' படத்தில் நடித்து வருகிறார். கே.ஜி.எப் நடிகை ஸ்ரீநிதி ஷெட்டி கதாநாயகியாக நடித்திருக்கும் இப்படத்தை பிரபல இயக்குனர் சைலேஷ் கொலானு இயக்குகிறார்.

பிரசாந்தி திபிர்னேனி தயாரிப்பில் உருவாகும் இப்படம் வருகிற மே மாதம் 1ம் தேதி திரைக்கு வருகிறது. நடிகர் நானியின் பிறந்தநாளை முன்னிட்டு இப்படத்தின் டீசர் வெளியாகி வைரலானது. 'ஹிட் 3' படத்தின் முதல் பாடல் வெளியானது.

படக்குழு தற்பொழுது புது போஸ்டரை வெளியிட்டுள்ளது. அதில் நானி வாயில் சுருட்டுடன் மற்றும் கயில் துப்பாகியுடன் மாஸாக இருக்கிறார். போஸ்டர் இணையத்தில் வைரலாகி வருகிறது.

## 8வது எபிசோட் : காமிக்ஸ் வடிவில் வெளியான ரெட்ரோ படத்தின் படப்பிடிப்பு காட்சி





நடிகர் சூர்யாவின் 44வது படமான 'ரெட்ரோ' படத்தை இயக்குனர் கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ளார். சூர்யாவின் 2டி மற்றும் கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன் பென்ச் நிறுவனம் இணைந்து தயாரிக்கின்ற இப்படத்திற்கு இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் இசையமைத்திருக்கிறார்.

பூஜா ஹெக்டே கதாநாயகியாக நடித்திருக்கும் இப்படத்தில் ஜெயராம், கருணாகரன், ஜோஜு ஜார்ஜ், மற்றும் சுஜித் ஷங்கர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படம் வருகிற மே 1ந் தேதி தொழிலாளர் தினத்தில் வெளியாக உள்ளது. முன்னதாக டீசர், முதல் பாடல் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றது.

ஏற்கனவே இப்படத்தின் படப்பிடிப்பு காட்சி காமிக்ஸ் வடிவில் வெளியாகி இருந்தது. மேலும், வாரத்திற்கு ஒன்று என்ற கணக்கில் படப்பிடிப்பு காட்சிகளை வெளியிடவுள்ளதாக படக்குழு அறிவித்திருந்தது. இந்த வாரம் 8 வது எபிசோடை வெளியிட்டது அதில் நடிகர்களான ஜெயராம் மற்றும் ஜோஜு ஜார்க் படத்தின் எப்படி திறமையான நடிப்பை வெளிப்படுத்தினார் என்பதை விவரித்துள்ளது. இது ரசிகர்களை வெகுவாக கவர்ந்து வைரலாகி வருகிறது.

## "எம்புரான்" திரைப்படத்தில் மத்திய இணை அமைச்சர் சுரேஷ் கோபி பெயர் நீக்கம்





மோகன்லால் நடிப்பில், மலையாள நடிகர் பிருத்விராஜ் இயக்கத்தில் கடந்த 2019ம் ஆண்டு வெளியான 'லூசிபர்' படத்தின் 2ம் பாகமாக உருவான 'எல் 2 எம்புரான்' கடந்த 27 ம் தேதி வெளியானது. மஞ்சுவாரியர், டோவினோ தாமஸ் உள்ளிட்ட பலர் நடித்திருக்கும் இப்படம் வசூல் ரீதியாக நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. அதிவேகமாக ரூ. 100 கோடி வசூல் செய்த மலையாள படம் என்ற புதிய சாதனையை 'எல் 2 எம்புரான்' படைத்திருக்கிறது. இதுவரை ரூ.200 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளது. இந்த படத்தில் ஒரு சில சர்ச்சைக்குரிய காட்சிகள் இடம்பெற்றிருப்பதாக கூறப்பட்ட நிலையில் படக்குழு அதற்காக 17 இடங்களில் காட்சிகள் நீக்கி மொத்தமாக 3 நிமிட காட்சிகளை படத்தில் இருந்து எடுத்தனர். நடிகர் மோகன்லாலும் இதற்கு வருத்தம் தெரிவித்து தனது சமூக வலைதளப் பக்கங்களில் பதிவிட்டிருந்தார். இந்த சூழலில் 'எல் 2 எம்புரான்' படத்தை வெளியிட தடை விதிக்கக்கோரி கேரள ஐகோர்ட்டில் பா.ஜ.க. நிர்வாகி ஒருவர் வழக்கு தொடர்ந்திருந்தார். இதன்படி, "இந்த திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள சில காட்சிகள் 2002 குஜராத் கலவரத்தை நினைவுபடுத்தும் விதமாக இருப்பதாகவும், வகுப்புவாத வன்முறையைத் தூண்டும் அபாயத்தைக் கொண்டுள்ளதாக தெரிவித்திருந்தார். மேலும், இதில் முல்லை பெரியாறு அணை பாதுகாப்பற்றதாக சித்தரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டி இருந்தார். நடிகர் மோகன்லால் நடித்துள்ள 'எம்புரான்' திரைப்படத்திற்கு தடை விதிக்க கேரள ஐகோர்ட்டு மறுப்பு தெரிவித்துள்ளது. எம்புரான் திரைப்படத்தில் குஜராத் மதக்கலவரத்தைப்போல காட்சி ஒன்று இடம்பெற்றிருந்ததற்கு வலதுசாரிகள் எம்புரானைக் கடுமையாக விமர்சித்தனர். 2002ல் நடப்பது போன்ற மதக்கலவரக் காட்சியை 'சில ஆண்டுகளுக்கு முன்' என மாற்றியுள்ளனர். அதேபோல், இஸ்லாமிய பெண்கள் தாக்கப்படும் காட்சிகளை நீக்கியதுடன் இந்து அமைப்பைச் சேர்ந்த முக்கிய கதாபாத்திரங்களான பல்ராஜ் பட்டேல் மற்றும் முன்னா ஆகியோர் பேசும் மத அரசியல் வசனங்கள் நீக்கப்பட்டுள்ளன. மேலும், நடிகரும் பாஜக எம்பியுமான சுரேஷ் கோபிக்கு படத்தில் தெரிவித்த நன்றியையும் படக்குழு நீக்கியுள்ளது. எம்புரான் படத்தை பாஜகவினர் கடுமையாக எதிர்த்து வரும் நிலையில், மத்திய இணை அமைச்சர் சுரேஷ் கோபியின் பெயரைப் படக்குழு நீக்கியது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

## ஐபிஎல்: லக்னோ அணியை பந்தாடியது பஞ்சாப்



10அணிகள்இடையிலான18வதுஐ.பி.எல்.கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இதுவரை 12 லீக் ஆட்டங்கள் முடிந்துள்ளன.

இந்த சூழலில், இந்த தொடரில் லக்னோவில் இன்று நடைபெறும் 13வது லீக் ஆட்டத்தில் ரிஷப் பண்ட் தலைமையிலான லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணி, ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான பஞ்சாப் கிங்சை எதிர்கொண்டது. அதில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது. இதன்படி லக்னோ அணி முதலாவதாக பேட்டிங் செய்தது.

முடிவில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் லக்னோ அணி 7 விக்கெட்டுகளை இழந்து 171 ரன்கள் எடுத்தது. அந்த அணியின் சார்பில் அதிகபட்சமாக பூரண் 44 ரன்களும், ஆயுஷ் பதோனி 41 ரன்களும் எடுத்தனர். பஞ்சாப் அணியின் சார்பில் அதிகபட்சமாக அர்ஷ்தீப் சிங் 3 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார்.

இதனைத்தொடர்ந்து 172 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பஞ்சாப் அணி பேட்டிங்கை தொடங்கியது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பஞ்சாப் அணி 16.2 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை எட்டியது. இதன் மூலம் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றியை பஞ்சாப் பெற்றுள்ளது.

## களத்திலேயே உயிரிழந்த குத்துச்சண்டை வீரர்



ஆப்பிரிக்கநாடானகானாவில்நடைபெற்றகுத்துச்சண்டை போட்டியின்போது, திடீரென வலிப்பு வந்து நைஜீரிய வீரர் உயிரிழந்தது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கானா தலைநகர் அக்ராவில் நடைபெற்ற போட்டியில் நைஜீரிய வீரர் கேப்ரியல், கானா வீரர் ஜான் ம்பங்கு என்பவரை எதிர்கொண்டார்.

இந்த மோதலின் 3வது சுற்றில் இருவரும் ஆக்ரோசமாக தாக்கிக்கொண்டு இருந்த போது, நைஜீரிய வீரர் கேப்ரியல் வலிப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்து களத்திலேயே உயிரிழந்தார். குத்துச்சண்டை போட்டியில் வலிப்பு வந்து மயங்கிய வீரர் களத்திலேயே உயிரிழந்த நிகழ்வு ரசிகர்களிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

## இந்தியா-இங்கிலாந்து டெஸ்ட் தொடர்; புதிய பெயரில் பரிசுக்கோப்பை..?





2007ம் ஆண்டு முதல் இங்கிலாந்தில் நடைபெறும் இந்தியாஇங்கிலாந்து அணிகள் இடையிலான டெஸ்ட் தொடரில் வெற்றி பெறும் அணிக்கு இந்திய அணியின் முன்னாள்கேப்டன்மன்சூர்அலிகான்பட்டோடிபெயரில் பரிசுக்கோப்பை வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில், இந்த கோப்பைக்கு ஓய்வு கொடுக்க இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி வருகிற ஜூன், ஜூலை மாதங்களில் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இந்த தொடரில் இருந்து புதிய கோப்பை அறிமுகப்படுத்தப்படும் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.